முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 435/2015

தேதி : 29-02-2024

(பி.வா.சா.2) - ரங்கசாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு மேலும் தொடர்ந்து முதல் விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை தொடர்ச்சி:

15.07.1966 தேதி பிராது 1-லக்க சொத்தை நாச்சிமுத்து கவுண்டர் கிரையம் பெற்றதற்கான கிரையப் பத்திரத்தின் ஆன்லைன் நகல் பி.வா.சா.ஆ.6. 24.03.1975 தேதி பிராது 3 மற்றும் 4-லக்க சொத்துக்களை கருப்பாத்தாள் கிரையம் பெற்றதற்கான கிரையப் பத்திரத்தின் ஆன்லைன் நகல் பி.வா.சா.ஆ.7. 26.04.2013 தேதி 3-ம் பிரதிவாதிக்கு 2-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த பாகபாத்திய விடுதலைப் பத்திரத்தின் ஆன்லைன் நகல் பி.வா.சா.ஆ.8. அதே தேதி 4-ம் பிரதிவாதிக்கு 3-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் ஆன்லைன் நகல் பி.வா.சா.ஆ.9. அதே தேதி 3-ம் பிரதிவாதிக்கு 2-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த பாகபாத்திய விடுதலைப் பத்திரத்தின் ஆன்லைன் நகல் பி.வா.சா.ஆ.10. அதே தேதி 5-ம் பிரதிவாதிக்கு 3-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் ஆன்லைன் நகல் பி.வா.சா.ஆ.11. அதே தேதி 3-ம் பிரதிவாதிக்கு 2-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் ஆன்லைன் நகல் பி.வா.சா.ஆ.12. அதே தேதி 4-ம் பிரதிவாதிக்கு 3-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் ஆன்லைன் நகல் பி.வா.சா.ஆ.13. 06.08.2019 தேதி பிராது 2-லக்க சொத்தைப் பொறுத்து ஏற்படுத்தியுள்ள பிழைதிருத்தம் ஆவணத்தின் ஆன்லைன் நகல்

பி.வா.சா.ஆ.14. 03.01.2024 தேதிய 4–ம் பிரதிவாதி பெயரில் உள்ள நத்தம் நிலவரி பட்டா நகல் பி.வா.சா.ஆ.15 வரிசை (2 எண்ணிக்கை). 1–ம் பிரதிவாதியின் கணவர் எழுதிய கடிதம் பி.வா.சா.ஆ.16 (வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை: ஒத்திவைக்கப்படுகிறது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.03.01 10:36:06 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.